Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (26-2-66) இதழ் 18

விசுவாவசு மாசி 15 ஜுல்க:பறை 4 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

தரத்தையும் குணத்தையும் அறிய

இன்றே பாவியுங்கள்

முல்லா பீடிகளை

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

முல்லா பீடி கம்பனி

கே.கே.எஸ் ரோட் - யாழ்ப்பாணம்.

## நிக்ருமா சிலை எரிக்கப்பட்டது

ஆக்ரா, பெப். 25

கானாவில் டாக்டர் நிக்ருமாவின் வெண்கலத்திலான பெரிய உருவச்சிலை ஒன்று எரிக்கப்பட்டது. அப்போது கொடுங்கோலாட்சி ஒழிந்து விட்டது எனப் பலர் கோஷமிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்லிமெண்டுக்கு முன்னாலிருந்த சிலையே எரிக்கப்பட்டது.

# டாக்டர் நிக்ருமா சீனாவில சிலகாலம் தங்குவார்

## ஸ்ரீமதி நிக்ருமா கெய்ரோ வந்து சேர்ந்தார்

பீகிங், பெப். 25

பீகிங்கில் முன்னாள் ஜனாதிபதி என்குருமாவின் நிகழ்ச்சிகள் அனைத்தும ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

கானாவில் ஏற்பட்டுவரும் நிலைமைகளை டாக்டர் நிக்ருமா சீனாவில் இருந்து கொண்டே கவனித்துவருவாரென்றும், சில நாட்களுக்கு அவர் அங்கு தங்குவாரென்றும் தெரிகிறது.

இதற்கிடையில் ஸ்ரீமதி நிக்ருமா தமது இரண்டு பிள்ளைகளுடன் கெய்ரோ வந்து சேர்ந்தார். நிருபர்களுக்கு அவர் பேட்டியளிக்க அனுமதிக்கப்படவில்லை.

லண்டனில் அஞ்ஞாதவாசம் புரிந்து வரும் கானாவின் முன்னாள் பாதுகாப்புத் தலைவர், தாம் லண்டனிலிருந்தே கானா புரட்சிக்குத் திட்டமிட்டதாகக் கூறினர்,

கானா புரட்சிபற்றி சீன ரேடியோவோ, அல்லது பத்திரிகைகளோ, எவ்விதத் தகவலும் வெளியிடவில்லை.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி வடவியட்னாமுக்கும் பிரயாணம் செய்யும் தமது திட்டத்தை டாக்டர் நிக்ருமா கைவிட்டுவிட்டார் என அறியப்படுகிறது

## நம்பிக்கை இழக்கவில்லை

பீகிங், பெப். 25

தற்போது பீகிங்கிலிருக்கும் டாக்டர் நிக்ருமா கானாவில் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி எதுவித கவலையும் கொள்ளாதவராக தாமே இன்னமும் கானாவின் ஜனாதிபதியெனத் தெரிவித்துள்ளார். தாம் காணவுக்குத் திரும்பிச்செல்ல உத்தேசித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## மந்திரியின் முயற்சிக்கு நியமன எம். பி. பாராட்டு

பம்பலப்பிட்டி, வெள்ளி

உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யு. தஹநாயக்காவின் திட்டப்படி நெசவுநிலையங்கள் நாட்டின் பல பாகங்களிலும் உருவாக்கப்படுவதைப் பாராட்டி நியமன எம். பி. திரு. வி. அண்ணாமலை மந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

இத்திட்டத்திற்கு இந்திய வம்சாவளியினர் சகல ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்குவார்கள். இதனை மனத்தில் கொண்டு தோட்டப் பகுதிகளிலுள்ளவர்களின் திறமையினையும் பயன்படுத்துவீர்கள் என நம்புகிறேன.

தோட்டப்பகுதிகளில் உள்ள தொகுதிகளில் இந்திய வம்சாவளி இளைஞர்களுக்கு இத்துறையில் பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தால் அதனால் மிக்க நன்மை ஏற்படும் என்றும் திரு. அன்னமலை தமது கடிதத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்

# சிறுவர் நூல்நிலையம் விரைவில் உருவாகும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மக்களுடைய முன்னேற்றத்துக்கு சிறுவர் நூல்நிலையம் இருக்கவேண்டியதன் அவசியத்தை யாழ்ப்பாண மாநகரசபை பொது நூல நிலையக்குழுவும் யாழ். மாநகரசபையும் வற்புறுத்தியதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மேயர் திரு. சி. நாகராசா இதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது

யாழ்ப்பாண பொது நூல் நிலையத்தின் மேல் மாடிக் கட்டடத்தில் சிறுவர்களுக்கான நூல்நிலையத்தை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக மேல்மாடி கட்டும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

புதிய சிறுவர் நூல்நிலையத்துக்கு ஆசிய நிதிஉதவிஸ்தாபனம் அளிக்கும் உதவியுடன் மாநகரசபையும் நிதிதிரட்ட ஒழுங்குகளை மேற்கொள்ளுமென அறியப்படுகிறது. (ந. நி.)

# மாணவர்களுக்கு பல்வைத்திய நிலையம்

## யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகளின் நலனை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் தனியான பல் வைத்திய சிகிச்சை நிலையமொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது

இந்த வைத்திய சிகிச்சை நிலையம் வேம்படி மகளிர் கல்லூரியிலுள்ள ஒருமண்டபத்தில் அடுத்த மாத முற்பகுதியிலிருந்து இயங்கும் என அறியபபடுகிறது.

இதற்கான தளபாடங்களும் வைத்திய கருவிகளும் ஏற்கனவே இங்கு வந்துள்ளன

முதலில் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும் பல் வைத்திய சிகிச்சைநிலையம் பின்னர் படிப்படியாக இங்குள்ள ஏனைய பாடசாலைகளிலும் இயங்குமெனத் தெரியவருகிறது, இந்த விஸ்தரிப்புச் செய்யப்படும் வரை சகல மாணவர்களுக்கும் வேம்படி மகளிர் கல்லூரியிலுள்ள நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்படும்.

யாழ்ப்பாணப் பகுதியில் இயங்கிவரும் தாய், சேய் சேமநல விடுதிகளினதும், கர்ப்பிணிகள், குழந்தைகள் வைத்தியப் பாடசாலை மாணவ, மாணவியர்களின் உடல் நல சுகாதாரம் ஆகியவற்றில் அக்கறை கொண்டுள்ள டாக்டர் திருமதி துரையப்பா மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்தே இங்கு மாணவர்களுக்கென தனியான பல் வைத்திய சிகிச்சை நிலையம் இயங்கவிருப்பதாக அறிறப்படுகிறது.

## இலங்கையர் அல்லாதவர்கள்

# இறக்குமதி கோட்டாக்களில் அதிக வெட்டு

கொழும்பு, வெள்ளி

இலங்கையர் அல்லாத வர்த்தகர்கள், பதிவு பிரஜைகளான இலங்கை வர்த்தகர்கள் ஆகியோரது இறக்குமதிக் கோட்டாக்களில் அரசாங்கம் அதிக வெட்டு செய்துள்ளது.

இலங்கை வர்த்தகர்களுக்கு அதிகமான கோட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. பால்மாவு, டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவு ஆகியவற்றுக்கான கோட்டாக்களிலேயே அதிக குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு புறக்கோட்டையைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் இதுபற்றி தெரிவிக்கையில் தாம் இதை ஆட்சேபித்துள்ளதாகவும் எந்த ரீதியில் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது பற்றி அறிய விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நகைகளுக்கு

யப்பான்

ஜுவலர்ஸ்

64, கன்னாதிட்டி

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

## ஹங்கேரி பிரதமர்

புதுடில்லி, பெப். 25

ஹங்கேரி பிரதமர் திரு கலாயும் அவரது மனைவியும் நேற்று நங்கல் அணைக்கட்டைப் பார்வையிட்டனர். ''மிகப்பெரிய சாதனை'' என அணைபற்றி அவர்கள் வருணித்தனர்.

# சதிமுயற்சி பற்றி பொலிசார் விசாரணை

கொழும்பு, சனி

இலங்கை அரசாங்கத்தை சட்டவிரோதமாகக் கவிழ்க்க சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் சதி முயற்சி செய்ததாகக் கூறப்படுவது சம்பந்தமாக முழு விசாரணையையும் பொலிஸ் பகுதியினரே மேற்கொள்வார்களென அறியப்படுகிறது.

லங்கா சமசமாஜக்கட்சியின் உயர்பீட அங்கத்தினரிடமிருந்து அதிகாரிகளுக்கு கிடைத்த துப்புக்களின் மீது இந்த விசாரணைகள் நடைபெற்றுவருகின்றனவாம். இதையொட்டி இன்று பொலிஸ் பகுதி புலன்விசாரணைப் பிரிவின் விசேஷ குழுவினர்கள் மாகாணங்களுக்குப் புறப்பட்டுச்சென்றுள்ளனர்

# இராணுவ நீதிமன்றம் விரைவில் விசாரணை

கொழும்பு வெள்ளி

இராணுவத்தில் சமய வகுப்புவாத அடிப்படையில் நடைபெற்று வந்த இயக்கங்கள் பற்றியும் மறு விபரங்கள் பற்றியும் இராணுவநீதிமன்றம் விரைவில் ஒரு விசாரணையை நடத்தும் என அறியப்படுகிறது. அவ்விசாரணையின்போது என். கியு. டயஸால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் எவ்வாறு ஒரு இராணுவ சிப்பாயின் கையில் சேர்ந்தது என்பது பற்றியும் ஆராயப் படும்.

## இராணுவசேவைக்கு 2500 டாக்டர்கள்

வாஷிங்டன், பிப். 25

2500 அமெரிக்க டாக்டர்கள் ராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## பாஸ்போர்ட் மோசடி செய்தவருக்கு சிறை

திருநெல்வேலி, பெப். 25

இந்தியாவிலிருந்து இலங்கை செல்ல விரும்பியவர்களுக்கு கள்ளத்தனமான பாஸ்போர்ட்டுகளைத் தயாரித்துக் கொடுத்த குற்றத்துக்காக கானி என்பவருக்கு திருநெல்வேலி நீதிபதி நான்கு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்

இதில் சம்பந்தப்பட்டிருந்த மேலும் ஆறு பேருக்கு தலா இரு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது இவர்கள் இந்த கள்ளத்தனமான பாஸ்போர்ட்டுகளை உபயோகித்து இலங்கை செல்ல முயற்சித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## சிங்

திம்பு, பெப் 25

இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங்கும் பூட்டான் மன்னரும் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மன்னருக்கும் அவரது சகோதரிக்கும் திரு சிங் அன்பளிப்புகள் பலவற்றை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நான் செய்கிறேன் என்ற எண்ணமின்றி, பலனைக் கருதாமல் இறைவனுக்கு அர்ப்பணமாக உனது செயல்கள் அனைத்தையும் செய்துவா.

— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 339

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி மீ 15 உ (26-2-66)

## ஆபிரிக்காவில் புரட்சி அலை

கானாவின் 'ஆயுட்கால ஜனாதிபதி' டாக்டர் என்குருமா வியட்னும் பிரச்னைக்கு சமரசத் தீர்வு காணுமுகமாக சமாதான யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்ற சமயத்தில் அவரது அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. புரட்சி நடைபெற்ற நாடுகளில் புரட்சிக்காரர்கள் வழமையாகச் சொல்வது போன்று கானாவின் புரட்சித் தலைவரும், டாக்டர் என்குருமாவின் 'ஆட்சி' மீது ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார். என்குருமாவினால் முன்பு பதவி நீக்கம் செய்யப்பட்ட மேஜர்ஜெனரல் அங்க்ரா தலைமையில் 'தேசீய விடுதலை சபை' என்னும் ஒருசபை ஆட்சி பீடத்திலமர்ந்துள்ளது.

கானாவின் விடுதலைக்கு டாக்டர் என்குருமா பெரும் போராட்டங்கள் நடத்தியவர். கானாவின் முன்னேற்றத்துக்கும் உழைத்து வந்தவர். ஆனால் ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும் அவர் தம்மை ஆயுட்கால ஜனாதிபதியாக்கிக் கொண்டதுடன் சர்வாதிகாரப் போக்கிலும் சென்றார். நாட்டில் தமது நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு இருப்பதை அறிந்தும் அந்த எதிர்ப்பை ராணுவ பலத்தினால் அடக்கிவிடலாம் என அவர் தவருகக் கணக்கிட்டதுதான் இன்று அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்குமுக்கிய காரணம் என்று சொல்லலாம்.

கானாவில் நடைபெற்றுள்ள புரட்சி ஆபிரிக்காவில் சென்ற நான்கு மாதங்களில் நடந்த ஆருவது புரட்சியாகும். கடந்த ஒன்பது மாதங்களில் அல்ஜீரியா, புருண்டி, கொங்கோ, டகோமி, மத்திய ஆபிரிக்க குடியரசு, மேல் வோல்ட்டா, நைஜீரியா ஆகிய ஆபிரிக்க நாடுகளில் புரட்சி ஏற்பட்டு அரசாங்கங்கள் கவிழ்க்கப்பட்டுள்ளன. ஆபிரிக்காவில் மீண்டும் தோன்றியுள்ள எழுச்சியும் கிளர்ச்சியும் பலாத்காரச் சம்பவங்களும்தான் இந்தத் திடீர்ப் புரட்சிகளின் விளைவு. சில வருடங்களுக்கு முன்னர் ஓய்ந்த புரட்சிஅலை மீண்டும் இப்போது தோன்றியுள்ளது

ஆபிரிக்க மக்கள் பல்லாண்டுகளாக அடிமைத் தளையில் அகப்பட்டுக் கிடந்தவர்கள். அவர்கள் கல்வி அறிவோ, அரசியல்ஞானமோ பெறுவதற்கு அந்நிய எஜமானர்கள் இடமளிக்கவில்லை. எனினும் இதர நாடுகளின் விடுதலை வேட்கை அவர்களையும் ஆட்கொண்டது. அதன் விளைவாக அவர்களும் விழிப்படைந்தனர். விடுதலை எழுச்சி கிளர்ந்தெழுந்தது ஆனால் அவர்கள் பலாத்காரத்தையே நம்பினர். பலாத்காரத்தின்மூலம் விடுதலைபெற்ருலும் அந்தப் பலாத்காரமே மீண்டும் மீண்டும் அங்கே தலைதூக்குகிறது. ஆபிரிக்க நாடு ஒன்றுக்குச் சென்றிருந்த வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் அங்குள்ள சாதாரண குடிமகன் ஒருவரிடம் ''உங்கள் நாடுகளில் அடிக்கடி கிளர்ச்சியும் புரட்சியும் ஏற்படக் காரணம் என்ன?'' என்று கேட்டாராம். ''எங்கள் நாடுகளில் மக்கள் தொகை அதிகம். அதேசமயம் அவர்கள் ஒவ்வொருவரும் ஜனாதிபதியாகவும் விரும்புகிருர்கள்'' என்று அவர் பதிலளித்தாராம். அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றதும் அதிகார ஆசை பிடித்துவிட்டது என்பதையே குடிமகன் கூறிய பதில் தெளிவாக்குகிறது. தங்கள் நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்தவர்கள் நாட்டின் ஐக்கியத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்தி நாட்டுமக்களுக்குத் தேசியஉணர்வை ஊட்டி சுதந்திரத்தின் பயனைத் தெரிவித்திருந்தால் இன்றைய பலாத்காரப் புரட்சிகள் ஏற்பட்டிருக்காது.

கானாப் புரட்சியிலும் இதர ஆபிரிக்க நாடுகளில் நடைபெற்றுள்ள புரட்சிகளிலும் வெளியார் தலையீடு எந்த அளவுக்கு இருக்கிறதென்பது தெரியவில்லை. என்றாலும் இதுபோன்ற புரட்சிகளில் அந்நியர் தலையீடு இருப்பது கடந்தகாலச் சம்பவங்களிலிருந்து அறிந்த உண்மை. அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு உதவி செய்யும் போர்வையிலும் நட்புறவைப் பலப்படுத்தும் போர்வையிலும் வெளிவல்லரசுகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு தமக்குச் சாதகமான நிலையையும் அரசாங்கங்களையும் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். எந்த நாட்டுக்கும் உதவி செய்ய விரும்பும் எந்த அரசும் நேரடியாக உதவி அளிக்காமல் ஐ. நா. ஸ்தாபனம்மூலம் உதவியளிப்பதற்கான ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டால் உலகில் பல பிரச்னைகள் சுலபமாக நீங்கிவிடும். இதேபோன்று ராஜீய உறவுக்காக ஏற்படுத்திக் கொள்ளும் ராஜீயத் தூதரக உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் அவர்களது நடவடிக்கைகளுக்கும்கூட ஒரு வரையறை செய்யப்படவேண்டும். ஆபிரிக்கநாடுகளில் இப்பொழுது தோன்றியுள்ள பலாத்காரப் புரட்சிச் சம்பவங்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஐ. நா. ஸ்தாபனம் ஆராய்ந்து பலாத்காரப் புரட்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான முயற்சிகளை உலக நாடுகளின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும்மேற்கொள்வது உலக முன்னேற்றத்துக்கும் உலக சமாதானத்துக்கும் நல்லது.

இன்று கானாவிலும் இதர ஆபிரிக்க நாடுகளிலும் நடைபெறும் புரட்சிச்சம்பவங்கள் புதிதாக விடுதலையடைந்து ஆதிக்கப் போட்டிகளுக்கு மட்டுமே தம்மை அர்ப்பணித்துள்ள இலங்கை உள்ளிட்டு ஆசியநாடுகள் சிலவற்றிலுள்ள அரசியல்வாதிகள் சிலரின் கண்களைத் திறக்கச் செய்ய வேண்டும். சுதந்திரம் கிடைத்துவிட்டால் போதாது. அதைச் சகல மக்களும் அனுபவிக்கவும் அதன்மூலம் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் தெரிய வேண்டும்.

பாராளுமன்ற விவாதம்

# அரசியல் சட்டமா அல்லது திருத்தமா?

(நேற்றைய தொடர்ச்சி)

சென்ற 18 வருடங்களிலும் அரசியல் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் எல்லாம் தெளிவுபட்டுவிட்டன. ஏராளமானகுறைகள் இருப்பதும் தெரிந்துவிட்டன. இந்த அரசியல் சட்டம் பூரண சுதந்திரத்தைநமக்கு கொடுத்துவிடவில்லை. இத்துடன் நமது முன்னேற்றமும் தடைப்பட்டது. இவற்றை உணர்ந்த காலஞ்சென்ற பண்டாரநாயகா 1956-ம் ஆண்டில் இதில் திருத்தம் செய்வதற்காக பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார். கமிட்டி ஒன்றை நியமிப்பதன் மூலம்தான் புனரமைப்பு செய்யமுடியும் என்று கருதியஅவர் அப்படியே ஒரு கமிட்டியையும் நிறுவினர். எனக்குமுன்னர் பேசியவர் இக்கமிட்டி மூன்றுமுறை கூடியதைப் பற்றியும்இங்கு எடுத்துக் கூறினர். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட சில நிலைமைகளும், பண்டாரநாயகாவுடைய கொலையும்கமிட்டியின் வேலைகளுக்கு தடையாகஇருந்தன. தொடர்ந்து பதவிக்கு வந்த எனது அரசாங்கமும் இதேபோன்ற கமிட்டிஒன்றை நியமித்தது. ஆனல் பலவாறான தடைகளின் காரணமாக கமிட்டியின் வேலைகள் தடைப்பட்டன. இப்போதும அரசாங்கக்கட்சித் தலைவர் அதே பிரேரணையை சமர்ப்பித்துள்ளார். எங்களுடைய அபிப்பிராயத்தின்படி இப்படியான கமிட்டி ஒன்று நமது தேவையைப் பூர்த்தியாக்காது. இதைநாம்சென்றமுறை எடுத்துக்கூறியிருந்தோம். மூன்றில் இரண்டு பங்குமெஜாரிட்டிபலத்தால் அரசியல் சட்டத்தை திருத்தி அமைத்துவிடலாமென்று இதுவரையும் நம்பியிருந்தோம். ஆனல் இன்றோ அப்படிச்செய்ய முடியாதென்பதை உணர்ந்து விட்டோம். அவைகளை உத்தேசித்து எதிர்க்கட்சியினரின் சார்பில் இந்தப்பிரேரணையை வாபஸ்பெற்றுக்கொள்ளும்படியும் புதியசட்டவிதிகளைக் கொண்டுவரும்படியும் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்படியான முயற்சிக்குநாம் நமது பூரண ஒத்துழைப்பைத் தருவோம். பிரேரணையில் கோரப்பட்டிருப்பதைப்போல அரசியல் சட்டத்தை திருத்துவதனல் எதுவித பலனும் ஏற்பட்டுவிடாதென்று நாம் நம்புகிறோம். (சபையில் அமைதியின்மை)

சபாநாயகர்:- சபையில் எம். பி.க்கள் அமைதியாக இருக்கவேண்டும். சபை ஒழுங்கு விதிகளை ஒவ்வொருவரும் அறிந்திருக்கக் கடமைப்பட்டவர்கள். இப்படியான சூழ்நிலையில் சபைச் சட்டங்களை நடத்துவது தர்மசங்கடமாகவுள்ளது.

திருமதி பண்டாரநாயக்கா:- இப்பிரச்னை பற்றி நான் நீண்டநேரம் பேச விரும்பவில்லை. எதிர்க்கட்சியிலுள்ள அநேகர் பேசவிருக்கிருர்கள். தயவு செய்து இப்பிரேரணையை வாபஸ் செய்து அரசியல் சட்டத்தை முற்ருகமாற்றியமைப்பதற்கான கமிட்டி ஒன்றை நியமிக்கவும். அப்படி ஒரு கமிட்டி நியமிக்கப்படுவதற்கு எமதுமனப்பூர்வமான ஆதரவு கிடைக்கும்.

திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் கூறியதாவது:

இதுசம்பந்தமாக எதிர்க்கட்சிகளினுடைய கொள்கையைத் தெளிவாகக் கூறியுள்ளார். தற்போதைய பிரேரணையை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டுமென்றும் இலங்கைக்குப் புதிய அரசியல் திட்டமொன்றைக் கொண்டுவரப் புதிய பொறுக்குக்கமிட்டி ஒன்றை நியமிக்க வேண்டுமெனவும் அவர் பிரேரித்துள்ளார். அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்பது ஒரு விஷயம். கோரப்பட்டிருப்பது மற்ருெரு விஷயம்.

எனது நண்பரும் ராஜாங்க மந்திரியாய் இருப்பவரும் விவாதத்தில் குறுக்கிட்டபோது இப்பிரேரணையை ஏன் திருத்தியமைக்க முடியாதென்று கேட்டார். ஒரு கமிட்டிக்கு அங்கத்தவர்களை நியமிப்பதுடன் சம்பந்தப்பட்டதே இப்பிரேரணை. ஆகையினல் இப்பிரேரணையைப் பொறுத்தமட்டில் நாம் செய்யககூடியது சில அங்கத்தவர்களுடைய பெயர்களைச் சேர்த்துக் கொள்ளவோ அல்லது அகற்றிவிடவோதான் முடியும். இப்பிரேரணையை கொண்டுவர எமக்கு என்ன அவசிய மேற்பட்டது? தற்போதைய அரசியல் சட்டத்தில் முக்கியமாகக் கவனிக்கக்கூடியது என்னவெனில் அதை எவராவது விரும்பியது கிடையாதென்பதே. 18 வருடகாலமாக இந்த அரசியல் சட்டம் இயங்கிவந்துள்ளது. பலதரப்பட்ட மக்களும் கட்சிகளும் பல சந்தர்ப்பங்களில் அரசியல் சட்டத்தில் குறைபாடுகள்இருக்கின்றன என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்தும் வந்துள்ளன. 1956ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காஅதிகாரத்திற்கு வந்த பின்னர்தான் அரசியல் சட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம்செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கை உத்தியோகபூர்வமாக செய்யப்பட்டது. அதற்குமுன்னர் யு. என். பி. அரசாங்கம் பழைய அரசியல்சட்டத்தின்கீழ் சந்தோஷமாக அலுவல்களை நடத்திவந்ததுடன் காலத்துக்குக்காலம் சிறிய திருத்தங்களை செய்துகொண்டதுடன் திருப்தியடைந்தது.

ஆசியாவின் சுதந்திரநாடுகளில் தனது அரசியல் சட்டத்தை தானே உருவாக்கிக்கொள்ளாமல் இருக்கும் சில தேசங்களில் இலங்கையும் ஒன்று. ஆசியாவிலுள்ள மற்றெல்லா சுதந்திரநாடுகளும், ஆபிரிக்க நாடுகளும்- ஆபிரிக்க நாடுகள் பற்றி திட்டவட்டமாக கூற என்னல் முடியாது ஆனல்ஆசிய நாடுகளைப் பொறுத்தமட்டில் முடியும். தங்களுக்கான சட்டசபைகளை தாமே நிர்ணயித்துக் கொண்டதுடன் அரசியல் சட்டங்களையும் தாமே வகுத்துக்கொண்டன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் எமக்கு வேறு அனுபவம் ஏற்பட்டது. கூறப்போனல் எமது அரசியல் சட்டம் ஏகாதிபத்திய சோல்பரிக் கமிஷனின் நகலை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. சோல்

(5-ம் பக்கம் பார்க்க)

# நிக்ருமா வீழ்ச்சி

புன்னகையும், சிரிப்பும், முகப்பொலிவும் கொண்டு பீகிங்கில் வந்திறங்கிய டாக்டர் நிக்ருமாவுக்கு தாம் கவிழ்க்கப்பட்டோம் என்பது தெரிந்திருக்கவில்லை. அப்போதுதான் அவர் ஆகாயப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தார். சீனத் தலைவர்கள் அவருக்கு உற்சாகமான வரவேற்பு கொடுத்தார்கள். 21 பீரங்கிகள் முழங்கின.

ஆனல் கிட்டத்தட்ட அதசமயம் ஆக்ரா ரேடியோவில் கேர்னல் கொடோகா என்ற புரட்சித் தலைவர் ''நிக்ருமாவின் பெருமை முறியடிக்கப்பட்டது'' என்று அறிவித்த குரல், லண்டன்வரை ஒலித்தது. ஆமாம்.

56 வயதான டாக்டர் நிக்ருமா வெளித்தோற்றத்தில் அமைதியும், கவர்ச்சியும் கொண்டு, ஆனல் இரும்புப்பிடியுடன் கானவை ஆண்டு வந்தார். அரசியல் எதிரிகளையெல்லாம் வீழ்த்தி, விசாரணையின்றி அவர்களை சிறையில் தள்ளினர். உயர் நீதிபதிகளைக்கூட தமது கருத்துக்கேற்ற தீர்ப்பு கிடைக்காததால் பதவி நீக்கம் செய்தார். நீதி, நிர்வாகம், ராணுவம் ஆகிய சகல துறைகளிலும் வியாபித்து 'எல்லாம் நானே' என்ற சர்வாதிகாரக் கூட்டத்தில் சேர்ந்திருந்தார் நிக்ருமா.

ஆபிரிக்காவின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும், கானவின் ஈடுஇணையற்ற அபிமான புதல்வராகவும் விளங்கியதால், மக்கள் அவரை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தார்கள் ஆனல் அதிகாரப் பசியால் ஜனநாயக ஏணியை உதைத்து வீழ்த்திவிட்டு, தம்மை ஆயுட்கால சர்வாதிகாரியாக கருதிக் கொண்டார் நிக்ருமா

உலகத்தில் மிகப் பெரும் சம்பளம் பெறுபவர்களிடாக்டர் நிக்ருமா ஒருவர். அநேகமாக அமெரிக்க ஜனாதிபதிக்கு அடுத்த சம்பளத்தை அவர் பெறுகிறார். சில ஆண்டுகளுக்கு முன்புதான் எதிப்திய எழிலரசி ஒருவரை அவர் மணந்தார். இரு குழந்தைகள், கல்வி, செல்வம், அதிகாரம், மகிழ்ச்சியெல்லாமே இருந்தன. ஆனல் எதிரிகளை மட்டுமே அவரால் சகிக்க முடியவில்லை.

ஒரு மார்க்ஸீய சோஷலிஸ்டான நிக்ருமா, அரசியல் ரீதியில், யூனியன் அரசாங்கம் ஒன்றைக் கொண்ட ஐக்கிய ஆபிரிக்காவைக் கனவு கண்டு வந்தார்.

பலமுறை டாக்டர் நிக்ருமாவின் உயிருக்கு உலை வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனல் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்பதற்கேற்ப, மரணபயத்திலிருந்து அவர் தப்பினர். ஆனல் டாக்டர் நிக்ருமா வீழ்த்தப்பட்டார்!

கான புரட்சி இவ்வாண்டு ஆபிரிக்காவில் ஏற்பட்ட நான்காவது புரட்சி. கடந்த 9 மாதங்களில் ஏற்பட்ட 8-வது புரட்சி. அல்ஜீரியா, புருண்டி, காங்கோ, டகோமி, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, அப்பர் வோல்டா, நைஜீரியா, ஸிரியா ஆகியன இதர புரட்சிகள்.

டி எம். எம்.

## ஆபிரிக்க திரையில் பல புரட்சி நாடகங்கள்!

# மேஜர் ஜெனரல் அங்க்ரா தலைமையில் கானு

# தேசிய விடுதலை சபை

# ராணுவ, பொலீஸ் தலைவர்கள் ஆட்சியை நடத்துவர்

## அரசியல் கைதிகள் விடுதலை: சிலர் கொல்லப்பட்டதாய் அறிவிப்பு

### என்குருமா வீழ்த்தப்பட்டதற்கு மக்கள் மகிழ்ச்சி

ஆக்ரா, பெப். 25

கானுவில் ஏற்பட்ட ராணுவப் புரட்சியை அடுத்து, அங்கு மேஜர் ஜெனரல் அங்க்ரா தலைமையில் தேசிய விடுதலைசபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது (முன்னுள் உதவி ராணுவத் தலைவரான அங்க்ரா சென்ற ஆண்டு நிக்ருமாவினுல் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.) நேற்றைய புரட்சியை நடத்திய கேர்னல் கொடோகா உட்பட எல்லா ராணுவ, பொலிஸ் தலைவர்களும் இச்சபையில் இருக்கிருர்கள்.

தற்போது பீகிங்கிலிருக்கும் டாக்டர் நிக்ரூமா நாட்டை அரசியல், பொருளாதார குழப்பத்திற்குக் கொண்டுலந்துவிட்டரென்றும், எனவே அவரது ஆட்சி வீழ்த்தப்பட்டதென்றும் தேசியசபைஅறிவித்துள்ளது

நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படுமென்றும் எல்லா சர்வதேச ஒப்பந்தங்களையும் கானு மதிக்கும் என்றும், ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம், காமன்வெல்த், ஐ. நா. ஆகியவற்றில் தொடர்ந்து இருந்துவரும் என்றும் அறிவிக்கப்பட்டது

### கட்சித்தலைவர்கள் கைது சிலர் பலி

இதற்கிடையில் டாக்டர் நிக்ரூமாவின் தேசிய கன்வென்ஷன் மக்கள் கட்சியின் எல்லாத் தலைவர்களும் கைதுசெய்யட்பட்டிருப்பதாயும், சிலர் கொல்லப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

துருப்புக்களும். டாங்கிகளும் வீதிகளில் ரோந்து சுற்றிவருகின்றன. வீதிகளில் கார்கள் எரிந்துகொண்டிருக்கக்காணப்பட்டன

டாக்டர் நிக்ரூமாவின் அரண்மனையில் துப்பாக்கி வேட்டுக்களும். எறிகுண்டு வீச்சுக்களும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

### மக்கள் மகிழ்ச்சி

டாக்டர் நிக்ரூமா வீழ்த்தப்பட்டார் என்ற செய்தி கேட்டவுடன் நகரவீதிகளில் மகிழ்ச்சிப் பெருக்குக் கொண்ட மக்கள் கூட்டம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### அரசியல் கைதிகள் விடுதலை

டாக்டர் நிக்ரூமாவினுல் சிறைவைக்கப்பட்டிருக்கும் எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு புதிய தலைமை உத்தரவிட்டிருக்கிறது. ஏற்கனவே 56 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

கானு புரட்சி கடந்த 4 மாதங்களில் ஆபிரிக்காவில் ஏற்பட்ட 6-வது புரட்சியாகும்.

### அரசியல் சட்டம் ரத்து

நிக்ரூமாவின் எல்லா மந்திரிகளும் பதவிநீக்கம்செய்யப்பட்டு, கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள். சிலர் காயமடைந்திருக்கிருர்கள். அரசியலமைப்புச்சட்டமும் கலைக்கப்பட்டிருக்கிறது. பார்லிமெண்ட் கலைக்கப்பட்டதும் ஆளும் கட்சிகலைக்கப்பட்டதும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்திருக்கும்.

ஜனுதிபதி நாட்டிலில்லாத போது ஆட்சியைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த அதிபர் கமிஷனும் கலைக்கப்பட்டது.

### அங்க்ரா

மேஜர் ஜெனரல் அங்க்ரா கானுவின் ஜனுதிபதியாகவும் பிரதம சேனுதிபதியாகவும் இருப்பார்.

நிக்ரூமாவின் பொலிஸ் அதிபர் அடிஸ் அபாபாவில் நடைபெற்று கொண்டிருக்கும் மகாநாடொன்றில் தற்போது கலந்துகொண்டிருக்கிருர்.

## உகண்டாவில்..

கம்பாலா, பெப். 25

உகண்டாப் பிரதமர் ஒபட்டோ நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார். தமது ஆட்சியை வீழ்த்துவதற்கு வெளிநாட்டு ராணுவ உதவியைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாயும், இதைத்தவிர்க்கவே இந்த நடவடிக்கை என்றும் அவர் அறிவித்தார். அரசியலமைப்புச் சட்டத்தைத் தலைவர்கள் எதிர்த்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை.

## ராஜ்ய சபைக்கு 71 அங்கத்தினர்கள்

### அடுத்த 28-ல் தேர்வு

புதுடில்லி, பெப். 25

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படும் ராஜ்ய சபை அங்கத்தினர்கள் 71 பேர் அடுத்தமாதம் 28-ம்திகதி தெரிவு செய்யப்படுவார்கள்.

4 மத்திய மந்திரிகள் வெவ்வேறு ராஜ்யங்களிலிருந்து காங்கிரஸ் வேட்பாளர்களாக பொறுக்கப்பட்டிருக்கிருர்கள்.

திரு சஞ்சீவரெட்டி, திரு. பக்ருதீன் அஹமத், திரு சக்ளா, திரு அசோக் மேத்தா ஆகியோரே அவர்கள்.

## தமிழ் மொழி அரசாங்க மொழி

சென்னை, பெப். 25

தமிழ்நாடு அரசாங்கம் சில இலாகாக்களில் தமிழ்மொழி உபயோகத்தை அமுலுக்குக்கொண்டு வருகிறது. இயன்ற அளவு விரைவில் ராஜ்யத்தில் தமிழை அரசாங்க மொழியாக்கும் பொருட்டு இந்தநடவடிக்கை.

## கட்ச் மன்றம்

ஜெனிவா, பெப். 25

கட்ச் விசாரணை மன்றம் தனது அடுத்த கூட்டத்தை செப்டம்பர் மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைத்தது.

## ஐ. அ. கு. தூதாகத்தில் மனைவி தஞ்சம்

### குழப்பமான நிலையில் கணவர் என்குருமா

பீகிங், பெப். 25

இணையற்ற ஆதிக்கம் செலுத்திய தன்னை கானு ராணுவத்தினர் கவிழ்த்துவிட்டார்களென்ற செய்தியைப் பீகிங்கில் கேட்ட டாக்டர் நிக்ரூமா எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவில்லை. மாலையில் பீகிங்கில் நடைபெற்ற விருந்திலும் அவர் இதுபற்றிக் குறிப்பிடவில்லை.

எனினும் அவர் குழப்பம் அடைந்தும், அதேசமயம் அமைதியாகவும் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. எனினும் தனது உயர் ஆலோசகர்களுடன் திட்டமிட்டபடி வடவியட்னும் செலலப்போவதாய் அவர் அறிவித்தார்.

அதேசமயம் கானுவின் பெருமை மிக்க ஜனுதிபதியின் மனைவியாக இருந்த ஸ்ரீமதி என்குருமா அரண்மனைச் சண்டைக்குப்பின் ஆக்ராவிலுள்ள ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதராலயத்தில் தனது இரு பிள்ளைகளுடன் தஞ்சம்புகுந்தார் எகிப்தியப் பெண்ணுன அவருக்கு நாடு திரும்ப அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது

புரட்சி நடைபெற்றபோது கணவன் சீனுவிலும், மனைவி கானுவிலும் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தம் 400 பேர் மாண்டனர்

## சிரியா அதிபர் தப்பினுர்! ஆனுல் இரு புதல்வர்கள் பலி

டமாஸ்கஸ், பெப். 25

சிரியாவில் ஏற்பட்ட திடீர் புரட்சியை அடுத்து ஏற்பட்டகலகத்தில் 400 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

அதிபர் மாளிகை டாங்கியினுல் தாக்கப்பட்டது என்றும், அப்போது நடைபெற்ற சண்டையில் ஜனுதிபதியின் இருபுதல்வர்கள் கொல்லப்பட்டார்கள் என்றும், மேலும் அறிவிக்கப்பட்டது.

அதிபர் தப்பி ஓடிவிட்டார்; ஆனுல் மாளிகை எரிக்கப்பட்டுவிட்டது

புதிய தலைவர்கள் தங்களை நன்கு ஸ்தாபித்துக்கொண்டுவிட்டதாயும், டமாஸ்கஸில் ஊரடங்கு நேரம் 5 மணியாகக் குறைக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு மத்தியில்

## இந்தோனேஷியமந்திரி சபை பதவி ஏற்றது

### 'நானே தலைவன் என்னை அடக்கமுடியுமோ?' — சுகர்ணே

ஜாகர்த்தா, பெப். 25

ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குப் மத்தியில் இந்தோனேஷிய மந்திரி சபை நேற்று பதவி ஏற்றுக் கொண்டது

பதவிப்பிரமாணம் நடைபெற்ற அதிபர் மாளிகைக்குள் நுழைய மாணவர்கள் முயன்றனர்.

அரண்மனைக்குச் செல்லும் எல்லா வாசல்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நொறுக்கிச் சேதப்படுத்தியபடியால் பதவி ஏற்கும் மந்திரிகள் ஹெலிகோப்டர்மூலம் ஜனுதிபதி சுகர்ணே மாளிகையை அடைந்தனர்.

மந்திரிசபையில் மாறுதல் செய்தது குறித்தும், ஜெனரல் நசூதியானை மந்திரிசபையிலிருந்து நீக்கியது குறித்தும் இந்தோனேஷியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மந்திரிகள் பதவி ஏற்புக்குப்பின் ஜனுதிபதி சுகர்ணே பேசியபோது தம்மை எவராலும் அடக்க முடியாது என்றும் தானே இன்னும் தலைவர் என்றும், இம்மி கூடப் பின்வாங்கப்போவதில்லை என்றும் கூறினுர்

கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் இந்தோனேஷிய மந்திரி சபையிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து சீன ரேடியோ இந்தோனேஷிய எதிர்ப்புப் பிரசாரத்தை நிறுத்திவிட்டது.

பிரிட்டன்

## மார்ச் 31-ல் பொதுத்தேர்தல்?

லண்டன், பெப். 25

மாஸ்கோவில் வியட்னும் பற்றிப் பேச்சு நடத்திவிட்டு பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் லண்டன் திரும்பினுர்

இதற்கிடையில் பிரிட்டனில் மார்ச் 31-ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறக்கூடும் என சகல அரசியல் கட்சி எம். பி. க்களும் கருதுகின்றனர். ஆனுல் திங்கட்கிழமைக்கு முன் திரு வில்சன் இதுபற்றி அறிவிக்க மாட்டார் எனக்கூறப்படுகிறது.

## ரஷ்யப் பிரதமர் லண்டன் வருவார்

லண்டன், பெப் 25

ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின் லண்டனுக்கு விஜயம் செய்ய சம்மதித்திருப்பதாயும், ஆனுல் திகதி நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## நீடிப்பு

புதுடில்லி, பெப். 25

தேசீய பாதுகாப்புத் தொகைக்குப் பணம்செலுத்துவது மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

## ஆற்றில் மிதந்த பொலிஸ் உடுப்புகள்

ரத்கம, வெள்ளி

பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் காக்கிநிற ஷேர்ட், காற்சட்டை, உத்தியோகதினக்குறிப்பு, பிரத்தியேகதினக்குறிப்பு, பொலிஸ் விசில், ஆங்கில நாவல் புத்தகம், ஒரு பெட்டி, ஒருமங்கையின் புகைப்படம் மற்றும் தஸ்தாவேஜுகளும் தொட்டகமுவை கங்கையோரத்திலிருந்து அப்பகுதி மக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து பொதுமக்கள் கிணிகொட்டகமுவை கிராம சேவகருக்கு தகவல் கொடுத்ததன் மூலம், ஹிக்கடு பொலிஸார் உடனடியாக ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து நீரில் மிதந்துவந்த இப்பொருட்களை எடுத்துச் சென்றனர். இவை, காலி பொலிஸைச் சேர்ந்த ஒரு பொலிஸ் சார்ஜனுடையது என்பது பின்னர் தெரியவந்தது. இதுபற்றி பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். இப்பொருள்கள் இங்குவந்தது பெரும் மர்மமாக இருக்கிறது.

# கவிதையும் கற்பனையும்

— வா. மாணிக்கம் —

இதே சந்தர்ப்பத்தில் எமது கவிச்சக்கரவர்த்தியின் கற்பனைத் திறனையும் சற்று ஆழமாகச் சிந்திக்கும்படி தசரத மன்னனுடைய அரசியல் சிறப்பை ஒரே ஒரு செய்யுளால் உத்வேகம் ததும்ப உணர்ச்சிப் பிரவாகத்தோடு வரைந்திருக்கிருர் கம்பர்.

''ஈந்தே கடந்தான் இரப்போர் கடல் எண்ணி நுண்ணூல், ஆய்ந்தே கடந்தான் அறிவெனும் அளக்கர் வாளால், காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்து மூற்ற, தோய்ந்தான் திருவின். தொடர் போகபவ்வம்.''

தசரதன் வரையாது கொடுக்கும் வள்ளல். பன்னூல் பாண்டித்தியம் வாய்ந்தவன். எதிரிகளுக்கு இளஞ்சிங்கம் போன்றவன். அஷ்டஐஸ்வரியசுகபோகத்தில் ஆழ்ந்து கிடப்பவன். இவற்றையே மூலாதார நோக்கமாகக் கம்பன் கற்பனைக் கண்ணுடி மூலம் கவனித்துப் பார்த்தான். அதிலே கவி சாதுரியத்தையும் கண்டார்.

ஒரு மன்னன் ஆட்சிக்குட்பட்ட தொகுதியினர் எல்லோருமே மகோன்னதப் பிரபுக்களாக இருப்பதில்லை. அங்கே வறியவர்கள் அநேகம் பேர், அங்கவீனர்கள் அதிகம் பேர். இத்திறத்தார் இரந்துண்டு வாழ்வதைத் தமது முக்கிய நோக்கமாகக்கொண்டிருக்கும் போது, அவர்களை அரவணைத்துக் காக்கும் பெரும் பொறுப்பு அரசனையன்றே சாரும். ஆகவே தசரதன் வற்ருத கடல் போல் பரந்திருக்கும் வறிய மாந்தர்க்கு வாரி வழங்கினன்.

அரசியல் அமைப்புக்கு அறிவு உறுதுணையாகவேண்டும். அறிவென்பது ஓர் ஆழ்கடல். அதில் எத்தகைய தெப்பங்களும் ஏற்றவாறு பிரயாணம் செய்யலாம். தசரதன் அவ்வறிவுக்கடலைப் ஆராய்ச்சி மூலம் தாண்டிச் சென்ருர். ஆகவே தசரதன் ஓர் அறிஞன். முடிபுனைந்த மன்னரென்ருல் அவனுக்குமுழுக்க முழுக்கவிரோதிகள் இருக்கக்கூடும். அவர்களை வென்று வாகை சூடித் தமது அரசியல் அமைப்பிற்குப் பங்கம் விளையவொட்டாது, தடுக்கவேண்டுமாயின் படைப் பயிற்சி மிக முக்கியமாகும். ஆதலின் 'வாளால் காய்ந்தே கடந்தான்' பகைவேலைஎன்ற வீரங்கொழிக்கும் பாடல் அடிகள் கம்பனுற் புகுத்தப்பட்டன. தசரதன்வறுமைக் கடலைத் தாண்டினுன்; அறிவுக்கடலைத் தாவினுன்; விரோதிக் கடலைக் கடந்து அப்பால் சென்ருன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அரசபோகத்தை அனுபவித்துக்கொண்டே இருக்கிருன். இதனை இன்னும் தாண்டிச் செல்லவில்லை. கற்பனை மூலம் கவிதை வளம் பெறும் விதத்தைக் கம்பனும் கட்டுரைத்திருக்கிருன்.

அறிவாற்றல் வாய்ந்தவர்களன்றி அஃதற்றவர்களின் உள்ளங்களையும் கவிதையில் மிதந்த கற்பனை கவருமென முன்னுல் கூறினேம். ஆற்றங்கரை அரசமர நிழலிலே ஆநிரையை நீரருந்தவிட்ட ஓர் ஆயன், அறிவைப் பெருக்கும் பல்கலைப்பயிற்சி அற்றவனுகிலும், அகமுருகிப் பாடும் ஒரு கற்பனைக் கவிதையின் அழகு வர்ணனையை அடியில் குறிப்பிடுகிருேம்.

(அடுத்த இதழில் முடியும்)

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் இங்கு கேட்கப்பட்ட கேள்விக்கு பலர் விடையெழுதியிருந்தனர். அதிகமானவர்கள் ஒரு கேள்விக்கு மட்டுமே சரியாக விடையெழுதியிருந்தனர். கேள்விகளுக்குரிய விடைகளைக் கவனிப்போம்.

முதலாவது கேள்வியின் விடை: கிரேக்க தத்துவ ஞானி, பிளேட்டோ.

இரண்டாவது கேள்வியின் விடை: 1924-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி.

பின்வருபவர்கள் இரண்டு கேள்விகளுக்கும் சரியாக விடை யெழுதியிருந்தனர். இவர்களுக்கு எமதுவிசேஷ பாராட்டுதல்கள்: ஒரு கேள்விக்கு மட்டும் விடையனுப்பியவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

எம் புஷ்பா, கரவெட்டி வடக்கு; பி எஸ் மரியதாஸ், கிளிநொச்சி; க ஜெகதீசன், மணற்காடு; எஸ் அலோசியஸ், செம்பியன்பற்று; சௌந்தரராஜன் கணேசஐயர், அனலைதீவு; பி யோகானந்தம், கே உருத்திராதேவி, கனகரத்தினம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்; ஜே ஜெயக்குமார், கரணவாய்தெற்கு; வி ஈஸ்வரம்மா, காரைநகர்; வை ஞானசுந்தரம், புத்தூர்; ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி; சி ஜே செபரத்தினம், அல்வாய் மேற்கு; வி தம்பிஐயா, அரியாலை; வி பரமேஸ்வரிஅம்மா, காரைநகர்; மு செபஸ்தியாம்பிள்ளை, பாஷையூர்; மா புஷ்பராணி, தேவரையாளி இந்துக் கல்லூரி; ப மகேந்திரதாசன், நாயன்மார்கட்டு; நா குணசேகரம், மறவகுறிச்சி, பூநகரி; கந்த. ஞானமுத்தன், கைதடி தெற்கு; இ கீதபொன்கலன், மாரீசன் கூடல்; ஐயன்ன முருகையா, சூராவத்தை; ந செல்லக்கிளி, சுன்னுகம்; சி தேவகுமார், இணுவில் மேற்கு; க இராசராஜேஸ்வரி, அனலைதீவு; ம சரோஜினி, காரைநகர்; பி யோகானந்தம், யாழ்ப்பாணம்; தி ஸ்ரீதரன், சுன்னுகம்; இ பூரணலிங்கம், தெல்லிப்பழை; செ மாசிலாமணி, பூநகரி மகாவித்தியாலயம்; இந்திராணி சொர்ணகாந்தி ஆறுமுகம், இராணி பவளகாந்தி ஆறுமுகம், பருத்தித்துறை; எஸ் என் கலாராணி, கல்வியங்காடு; தி சுலோசனு, சுன்னுகம்; எஸ் என் கோவிந்தாராம், யாழ்ப்பாணம்; சபா புஷ்பநாதன், சுன்னுகம்; யோகம் விவேகானந்தன், சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி; தி சரவணபவன், சுன்னுகம்; ஹென்றி அந்தோனிப்பிள்ளை, பலாலி குடியேற்றத்திட்டம்; மு சிவபாலசுந்தரம், கிளிநொச்சி மகாவித்தியாலயம்; மு தனபாலசிங்கம், நல்லூர்; து கருணனந்தசிவம், டி 8 உருத்திரபுரம்; கே வி நடராசா, கிளிநொச்சி; எஸ் பயஸ், பாஷையூர்; எம் எல் எம் இக்பால், யாழ்ப்பாணம்.

கேள்வி மண்டலம் இவ்வாரம் வெளியாகவில்லை. மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்.

-- சாந்தா.




## பொதுமேடை

'பொதுமேடைக்கு எழுதுபவர்கள் தங்களது உண்மையான விலாசத்தைக் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும். உள்ளதை உள்ளபடியே ஒழியாமல் எழுதுங்கள்.

க. கனகலிங்கம் எழுதும் 'வாஞ்சிமலை' தொடர்கதை நன்ருக இருக்கிறது. மற்றும் மாணவர்மலரில் இடம் பெறும் கட்டுரைகளும் அறிவுக்கு விருந்தளிப்பனவாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனுல் மாணவர்க்கு ஒரு மலர் மாணவர் மலர்.

க. சிவகாருண்யம்
இந்துக்கல்லூரி
காரைநகர்

(:)

இன்று இலங்கையில் வெளியாகும் தமிழ் தினசரிப்பத்திரிகையோ அல்லது மாதந்தோறும் வெளியாகும் பத்திரிகையோ, அவை எல்லாவற்றிலும் மாணவராகிய எங்களுக்கு மென்மேலும் அறிவைஓங்கச்செய்வது ஈழநாடு என்ருல் மிகையாகாது. எனவே இப்பத்திரிகையில் வெளியாகும் மாணவர்மலர் பகுதியை இரண்டு பக்கமாகக் கூட்டி வாசக நேயர்களைத் திருப்திப்படுத்தவும்.

தி. சரவணபவன்
சுன்னுகம்

(:)

மாணவர் மலர் ஒரு மதிப்பற்ற பொக்கிஷம். அது சிறப்புடன் மலர்ந்து வெளிவருவதற்கு எம்போன்ற வாசகர்களின் ஆதரவும் தேவை. 'மூளைக்கு வேலை' விஞ்ஞானக் கட்டுரைகள், உலகச் செய்திகள் என்பன மாணவர்களுக்குப் பயன்படக்கூடியது. ஆதலால் இவை போன்றவை இப்பகுதியில் இடம்பெறவேண்டும். சிந்தனைக்குரிய குறுக்கெழுத்துப்போட்டி, புதிர் இடம் பெற்ருல் மாணவர் நன்மையடைவர்.

கந்த ஞானமுத்தன்
கைதடி தெற்கு

(:)

நம் மாணவர் மலரில் கட்டுரை, கதை, கவிதை இம் மூன்றுக்கும் தான் முதலிடம் அளிக்கவேண்டும். 'மூளைக்குவேலை' பகுதியில் குறுக்கெழுத்துப் போட்டி நடாத்துவதே சாலச்சிறந்தது. இதுதான் மாணவர்களது மூளைக்கு நல்ல வேலையைக் கொடுக்கக்கூடியது.

சி. சுதந்திரராஜா
தாவடி

(:)

மாணவர் மலரில் வெளியாகும் கட்டுரை, சிறுகதைகள் அபாரம். ஞாபகத்திற்கு ஒரு பரீட்சைப் பகுதியைத் தொடர்ந்து வெளியிடுக.

செல்வி தேவகி
உடுவில்

(:)

வாஞ்சிமலை மிகவும் நன்று. வாசிக்க வாசிக்கக் கிழவன் மேல் கோபம்வருகின்றது. க. கனகலிங்கத்திற்கு எமது பாராட்டுகள்.

சு. செந்தில்காந்தன்
சு. தவமலர்
முஸ்லிம் கல்லூரி வீதி
யாழ்ப்பாணம்

அடுத்த ''மாணவர் மலர்'' 5-3-1966-ல் வெளிவரும்.

ஒரு புதிர்

# குழந்தை என்ன சொன்னது?

உங்களால் முடியுமா

சென்ற வாரம் இப்புதிர் இங்கு வெளியானதை சிலர் வரவேற்று எழுதியிருக்கின்றனர். பலர் பங்குபற்றியும் உள்ளனர். ஆனுல் குழந்தை என்ன சொல்லியிருக்கும் என்பதை யூகிக்க பலராலும் முடியவில்லை.

''குழந்தை என்ன சொன்னது?'' என்று கேட்டிருந்ததற்கு இருவர் மட்டுமே சரியான பதில் எழுதியிருக்கின்றனர். காரைநகரைச் சேர்ந்த க. சொர்ணம்பிகை என்பவரும் மீசாலை தெற்கைச் சேர்ந்த எஸ். மல்லிகாதேவி என்பவருமே சரியாக யூகித்து எழுதியுள்ளனர். இவர்களுக்கு எமது விசேஷ பாராட்டுதல்கள்!

ஆமா... அந்தக் குழந்தை மோகன் என்னதான் சொன்னது?

இதுதான்: ''பாணு... டாணு.., ம்மன்னுவுக்கு நானும் வாறேன்.''

மற்றுமொரு குழந்தைப் புதிரை அடுத்தவாரம் எதிர்பாருங்கள்.

# நமக்குச் செய்திகள்

''மாணவர் மலர்'' வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அடுத்த வாரம் முதல் ''நமக்குச் செய்திகள்'' என்ற புதிய பகுதி இங்கு வெளியாகும். உலகின் பல பகுதிகளிலும் நடைபெறும் செய்திகளைச் சுருக்கமாக நீங்கள் இதில் அறிந்து கொள்ளலாம். இடவசதிக்கிணங்க வெளிவரும் இப்பகுதியை உங்களுக்கு திரட்டித் தருபவர்: ''நடமாடும் ஞானி''

தொடர்நவீனம்

# வாஞ்சி மலை

— க.கனகலிங்கம் —

குருட்டுப்பெண் யார்? அவள் ஏன் மூன்று கனிகளை சிலையின்முன்வைத்து வணங்கியபின் எடுத்துச்செல்ல வேண்டும்? இவற்றில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும் என்று ஊகித்த அவன், அவளின் வருகைக்குக் காத்திருந்தான். டக், டக், ரிக், ரிக். அவள் வருகின்ருள், என்பதை உணர்ந்துகொண்டு சிலைக்குப்பின் ஒளித்தான். சற்று நேரத்துக்கெல்லாம் வழமைபோல் தன் வணக்கத்தை முடித்துக்கொண்டு திரும்பினுள். பின்தொடர்ந்தான் சிறுவன்.

என்ன ஆச்சரியம்? அவள் பாதாளத்தை நோக்கியல்லவா செல்கிருள். சிறுவன் அஞ்சவில்லை தொடர்ந்தான். அவள் தடியினுல் தட்டித் தட்டிப் பாதாளத்தை நோக்கி நடக்கலானுள். பத்துப் படிகள்தான் தாண்டியிருப்பான் சிறுவன். திரும்பினுள் குருடி.

''ஏன் நிற்கிருய்? அடேய் உனக்கு அவ்வளவு துணிச்சலா என்ன விழிக்கிருய்? நான்என்ன குருடியென்ரு நினைத்தாய்? என்ன நடக்கப்போகிறது என்றுபார்..'' என்று கூவியபடி ஓடிவந்து பற்றிப்பிடித்தாள் சிறுவனை. கொறகொறவென்று இழுத்துச்சென்ருள் பாதாளத்தை நோக்கி. சற்று நேரத்திற்கெல்லாம் இருவரும் ஓர் பாழ்மண்டபத்தை யடைந்தனர். சிறுவன் பீதியினுல் அலறினுன். ஆனுல் அவளோ அவன் நினைத்ததற்கு விரோதமாகக் கதறினுன். கண்ணீர் உகுத்தான். ஆனுல் அவன் இது வாஞ்சிமலைச் சேரியில் இதுவரை நடைபெற்ற கபட நாடகத்தின் தொடர்ச்சி என்றே எண்ணினுன். அவளோ தம்பி, என்னை நம்பு, நான் சொல்வதைச் சற்றுக்கேள்; ஆனுல் ''நீ யார் என்றுமட்டும என்னைக் கேட்டுவிடாதே. அதை நீயே சந்தர்ப்பம் வரும் பொழுது அறிவாய் என்று இரந்து கூறித் தொடர்ந்து தனது விபரங்களைக் கூறத் தொடங்கினுள்.

''தம்பி, எனக்கு ஒரேஒரு செல்வப்புதல்வன் இருந்தான். அவன் தந்தையை இழந்தவன் என்ற காரணத்தினுல் அவனைச் செல்வமாக வளர்த்தேன். அவன் கடற்கரை மணற்பரப்பிலே தன் நண்பர்களுடன் சென்று விளையாடுவதுவழக்கம். ஒரு நாள் கடற்கரைக்குச் சென்றவன் திரும்பிவரவில்லை. அவனைக் காணுது கலங்கியநான் அவன் நண்பர்கள் வீடு நோக்கி விரைந்தேன். அவர்கள் பெற்ருேரும் கலங்குவதைக் கண்டேன். வாஞ்சிமலை அரக்கர்கள் சிறுவர்களைக் கவர்ந்துவிட்டனர் என்றனர் சிலர். அவன் இன்றி எனக்கு ஒரு வாழ்வா? எப்படியும் அரக்கர்களிட மிருந்து அவனைக் காப்பாற்றுவேன் இல்லையேல் நானும் அரக்கர் குலத்திற்கு இரையாவேன் என்று திடசங்கற்பம் பூண்டேன். ஓடினேன் வாஞ்சிமலைச் சேரியை நோக்கி. ஒருவாறு வாஞ்சிமலைச்சேரியை நெருங்கிவிட்டேன் வந்தால் அபாயம் என அறிவிப்பனபோல்''இல் கில்'' என்று கத்தியது காட்டணில். மனதில் அச்சம் எழுந்தது. ஆனுல் பிள்ளைப் பாசம் வென்றது. நடந்தேன் கால்போன போக்கிலே. சற்றுத்தூரம் சென்றிருப்பேன். யார் அவன்? என்ற குரல் தடுத்து நிறுத்தியது. நோக்கினேன் குரல் வந்த திசையை. வாழ் போல் உயர்ந்த அரக்கர்கள் என்னைச் சூழ்வதைக் கண்டேன். பயத்தினுல்மயங்கி வீழ்ந்தேன். நான் கண்விழித்துப் பார்த்தபொழுது ஒரு மாளிகையின்கண் அரக்கர்கள் புடைசூழ ஒருபெண் முன் நிற்கக் கண்டேன். அவளை இச்சேரியின் தலைவி என்று அறிவதற்கு எனக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. அவள் என்னைக் கண்டதும் ஒருபார்வை பார்த்தாள். அது எனக்கும் பெண்மையுண்டு என்று பறை சாற்றுவதுபோல் இருந்தது. எதற்காக இங்கு வந்தாய் என்று கேட்டாள். நான் வழிதவறி வந்ததாகப் பொய் கூறினேன். நாளடைவில் அவளின் அன்பிற்குப் பாத்திரமானேன். ஒருநாள் பூரண நிலவு. நானும் அவளும் நிலாமுற்றத்தில் வந்தமர்ந்தோம், இதுவே தருணம் என்றுணர்ந்த நான் வாஞ்சிமலையின் பூர்வீக சரித்திரத்தைப்பற்றிக் கூறுமாறுகேட்டேன். அவள் யோசித்துவிட்டுப் பின் கூறலாளுள்''

## குறிப்பு

(இக்கதைபற்றிய உங்களின் உண்மையான அபிப்பிராயங்களைக் கண்டறியும் பொருட்டு இக்கதையின் முடிவை அடுத்தவாரம் வரை ஒத்திவைத்துள்ளோம். இக்கதைபற்றிய உங்களின் கருத்துக்களை அடுத்தமாதம் 4-ந் திகதிக்கு முன்னர் அனுப்பிவையுங்கள்).

''மாணவர் மலர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

**அரசாங்க கேள்விப்பத்திரங்கள்**

**பொலிஸ் பகுதி**

என் 205 - சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென ஊர்காவற்றுறை பொலிஸ் தொற்றுநோய் பரவாமத்தடை நிலையத்தில் மறித்துவைக்கப்பட்டிருப்போருக்கு ஒரு வருடத்திற்கு உணவு கொடுத்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 15-3-66.

என் 329 சட்டவிரோதமாகக் குடியேறிவர்களென தலைமன்னாரிலுள்ள பொலிஸ் தடுப்புக்காவல நிலையத்திலும், தொற்றுநோய் வராத்தடை நிலையத்திலும் மறித்துவைக்கப்பட்டிருப்போருக்கு ஒரு வருடத்திற்கு உணவு கொடுத்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 16-3-66.

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

என் 365-செம்மலடி உப பிரிவில் உயர்த்தும் கருவியுடன் மரக்கதவுகள் அமைக்கும் வேலை கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 8-3-66.

**சுகாதாரப் பகுதி**

என் 363-1966ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குதல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 18-3 66

இதன் முழு விபரங்களுக்கும் 25-2-66 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியில் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக வேறுவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 1754

---

**ஏலவிற்பனை**

**இலங்கை அரச கடற்படை**

என் 343- உபயோகமற்ற சாமான்கள் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ந் திகதி காலை 9 மணிக்கு திருகோணமலை டொக்யாட்டில் ஏலத்தில் விற்கப்படும் மற்றும் விபரங்களுக்கு 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும். 1702

---

## ஏல விற்பனை

**வீட்டுத் தளபாடங்கள்**

கச்சேரி நல்லூர் ரோட்டில் 61-ம் இலக்க இல்லத்தில்

**27—2—66**

**ஞாயிற்றுக்கிழமை**

பி. ப. 2-30 மணிக்கு.

குறிப்பு:- கச்சேரியிலிருந்து அரை மைல் தூரம்.

ஏல அதிபர்,

**கோணமலை ஐயாத்துரை**

2022




## கொழும்பு

**சனி 26 - 2 - 66**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 இசை மெட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-15 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம், 9-45 உங்கள் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.

# அரசியல் சட்டமா . . .

(-2ம் பக்கத்தொடர்ச்சி)

பரிக் கமிஷன் இலங்கைக்கு வந்தபோது தமிழ் காங்கிரசைத் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகளும் பகிஷ்கரித்தன. யாழ்ப்பாணத்து எம். பி. (திரு. பொன்னம்பலம்) தமிழ்க்காங்கிரஸ் சார்பில் கமிஷன் முன்னர் சென்று 10 வருடத்துக்கு ஒருமுறை பிரிட்டிஷ் கமிஷன் ஒன்று இங்கு வரவேண்டுமென்றும் அப்படி வந்து தமது சிபார்சுகள் சரிவர நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை பரிசிலனைசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது என்று ஞாபகத்திலுள்ளது.

உத்தியோகப்பற்றுன முறையில் வாக்குமூலமளிக்கப்படாதபோதிலும்- அந்த நேரத்திலிருந்து சட்டசபை உத்தியோகபூர்வமாக சோல்பரிக் கமிஷனை பகிஷ்கரித்தது. திரு. டி. எஸ். சேனநாயக்கா மறைமுகப் பேச்சுவார்த்தைகளைக் கால்பேஸ் ஹோட்டலிலும் மற்றும் சில இடங்களிலும் நடத்தியதை கமிஷனர்கள் தமது அறிக்கையில் இரக்கமின்றி சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இவைகளையிட்டு நான் கூறுவது அரசியல் சட்டம் எம்மீது திணிக்கப்பட்டதென்பதே. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திறல் நிறைவேற்றப்பட்ட சுதந்திரச் சட்டம் ஒன்றுமுண்டு. இதன்மூலம் இலங்கையின் ஆட்சியை அதன் சம்மதத்துடன் நடத்துவதாகவிருந்தது. அதன்பின்னர்தான் தற்போதைய அரசியல் சட்டம் சிபார்சுசெய்யப்பட்டது. ஆனால்எமது அரசியல் சட்டத்தை இயற்றும் சந்தர்ப்பம் எமக்குக்கிடைக்கவில்லை.

சென்ற 18 வருட காலமும் அரசியல் சட்டத்தை மாற்றுவது பற்றிய பேச்சுக்கள் இருந்துவருகின்றன. எந்தக்கோணத்திலிருந்து பார்த்தாலும் அரசியல் சட்டம் திருப்தியுள்ளதாகவே இருக்கிறது. முன்னேற்றத்துக்கு தடையானவைகளை அணைக்கிறது. விசேஷ சலுகைகள் என்றபோர்வையில் குறிப்பிட்டவர்களுக்கு பாதுகாப்பளிக்கிறது. புதுயுக சமுதாயத்தின் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கு முற்றும் பொருந்தாத நிலையிலுள்ளது. விரைவான அல்லது புரட்சிகரமான மாற்றங்களுக்கும் தடையாக இருக்கவேண்டுமென்பதற்காகவே இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. பழைய முறையைப் பாதுகாக்கவும் இது பக்கபலமாகவிருந்து வருகிறது. இவை எல்லாம் உண்மையாதலின் இதுபற்றி மேலும் கூறி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. இப்படியிருந்தபோதிலும் அரசியல் சட்டத்திலுள்ள குறைகளை பார்லிமெண்டில் மூன்றில் இரண்டுபங்கு வாக்குகளைப் பெற்று திருத்தியமைக்கலாமென்று பொதுவில் கருதப்பட்டது இதே அடிப்படையான நம்பிக்கையில் நீண்டகாலமாக- இப்போது இது பொய்யாக்கப்பட்டுவிட்டது- இருந்துவிட்டோம்.

கௌரவ சபைத் தலைவர் தமது பேச்சில் அரசியல் சட்டத்துக்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது பற்றிக் கூறினர் ஆனல் அப்படியான திருத்தங்கள் சிறியவைகளாகவே இருந்தன. திருத்தக்கூடியவைகளாக இருந்தவற்றில்தான் அவைகள் இடம்பெற்றன அரசியல் சட்டத்தில் முக்கியமானதும், அடிப்படையில் மாற்றம் செய்யக்கூடியதுமான திருத்தங்கள் உத்தியோகபூர்வமாகக் கொண்டுவரப்படவில்லை. இச்சபையினதும், பாராளுமன்றத்தினதும் அதிகாரம் ஒரு எல்லைக்குட்பட்டதென்றும், கட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்றும் எவரும் பிரத்தியட்சமாக அறியக்கூடிய அளவுக்கு துலாம்பரமாக்கப்பட்டது கிடையாது.

எனது நண்பர் இந்திய பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம்பற்றிப் பேசினர். அப்படியான சில சட்டங்கள் மூன்றில் இரண்டு மெஜாரிட்டி பெற்று நிறைவேறின ஆனல் அவைகள் அரசியல் சட்டத்துக்கு கொண்டுவரப்பட்ட திட்டவட்டமான திருத்தங்கள் அல்ல. அப்படியான சந்தர்ப்பங்களில் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி கிடைப்பது மல்லாமல் சபாநாயகருடைய அத்தாட்சி பத்திரமும் வேண்டும். அரசியல் சட்டத்துக்கு சில திருத்தங்கள் உள்ளன. ஆனல் அவைகள் சிறிய பிரச்னைகளுடன் சம்பந்தப்பட்டவை. சமீப காலம்வரையில் அடிப்படை மாற்றங்களுக்கு சிபார்சு எதுவும் கிடையாது.

சென்றவருடத்துக்குள்ளாக கௌரவ எதிர்க் கட்சித் தலைவிகூறியதைப்போல பிரிவிக்கவுன்சில் தீர்ப்புக்கள் இந்தப் பார்லிமெண்டின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டவொன்ருகும் என்பதை துலாம்பரப்படுத்தியுள்ளன. (குறுக்கீடுகள்)

திரு. ஜெயவர்த்தன:— இல்லை.

திரு. கெனமன்;—நீங்கள் சொல்லுவது அதுதான். இது தான் நான் கூறுவது.

திரு ஜெயவர்த்தன: — நான் உங்களுக்குப் படித்துக் காண்பிக்கிறேன்

திரு. கெனமன்:—நானும் வாசிக்கிறேன். நாமெல்லோரும் மாறுபட்டவைகளையே வாசிக்கிறோம்.

லஞ்சக் கமிஷனருக்கும் ரணசிங்காவுக்குமானவழக்குகள் பிரிவிகவுன்ஸில் தீர்ப்பிலும் இதுவிஷயம் கூறப்பட்டுள்ளது. நான் தீர்ப்பு முழுவதையும் படிக்க விரும்பவில்லை. மற்றவர்கள் அதுபற்றி விளக்கிக் கூறவிருக்கிருர்கள். லஞ்சக் கமிஷனுக்கும் ரணசிங்காவுக்குமிடையில் நடைபெற்ற வழக்கில் ஐந்து பிரிவுக்கவுன்ஸிலர்கள் தெரிவித்த அபிப்பிராயத்தை மாத்திரம் இங்கு வாசித்துக் காண்பிக்கின்றேன். இவ்வழக்கு 1963 ல் நடைபெற்றது. புதியசட்ட அறிக்கைகளின் 66 தொகுப்பின் 73-வது பக்கத்திலிருந்து படிக்கிறேன். இந்தத்தீர்ப்பு 1964-ம் ஆண்டில் பிரிவிகவுன்ஸிலின் மற்ற அங்கத்தவர்களின் சார்பில் பியோஸ் பிரபுவினல் வாசிக்கப்பட்டது. அங்கத்தவர்கள் விஸ்கவுண்ட் ரட்கிளிங், எவர்ஷெட் பிரபு, மோரிஸ்பிரபு, ஹட்ஸன் பிரபு ஆவர்.

அவர்கள் 29வதுஷரத்துப் பற்றி ஆராய்ந்தார்கள். —அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவு —இப்பிரிவு தான் பாராளுமன்றத்துக்கு சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளது.

29வது ஷரத்தின் 1வது பிரிவு கூறுவதாவது:

''இந்த அதிகாரத்தின்படி நாட்டில் அமைதி, ஒழுங்கு, நல்ல அரசாங்கம் ஆகியவைகளை நடைமுறையிலிருக்கச்செய்யச் சட்டங்களைக் கொண்டுவரும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உண்டு."

பிரிவிகவுன்ஸில் கூறுவது என்னவென்ருல்குறிப்பிட்ட ஷரத்து அரசியல் சட்டத்தின் ஓரம்சமாக இருப்பதனுல் அதில் மாற்றம்செய்ய முடியாதென்பதே.

எமக்கு ஒரு அபிப்பிராயமும், கௌரவ ராஜாங்கமந்திரிக்கு மற்ருேர் அபிப்பிராயமும் இருக்கலாம். ஆனல் பிரிவிகவுன்ஸிலின் தீர்ப்பின்படி நமது நீதிமன்றங்கள் 29வது ஷரத்தின்கீழ் இயங்குகிறதென்பதையும் அதில் மாற்றங்கள் செய்யமுடியாதென்பதையும் தெளிவு படுத்தியுள்ளன. பாராளுமன்றம் முழுவதும் ஏகமனதாக 29வது ஷரத்தை நீக்க வேண்டுமென்ருே அல்லது மாற்றியமைக்க வேண்டும் என்ருே தீர்மானித்தால் கூட அதைச் செய்யமுடியாதென்று பிரிவிகவுன்ஸில் தீர்ப்புக் கூறுகிறது.

சதிவழக்கு பிரிவுகவுன்ஸிலுக்கு அப்பீல்செய்யப்பட்டது சம்பந்தமாக இங்கு பெருமளவு கூறப்பட்டது. அந்தத் தீர்ப்பில் அரசியல் சட்டத்தில் சில அடிப்படையானவைகளையும் ஆதார பூர்வமானவைகளையும் மாற்றமுடியாதென பிரிவிகவுன்ஸில் கூறியுள்ளது. உதாரணமாக அதிகாரத்தைப் பிரித்தெடுப்பதைக் கூறலாம். அதிகாரத்தைப் பிரிப்பதுபற்றி நான் இங்கு விவாதிக்கவில்லை. ஆனல் பிரிவு கவுன்ஸிலின் இப்புதிய தீர்ப்பு இச்சபையினதும் இந்த பாராளுமன்றத்தினதும்அதிகாரத்தை அரசியல் சட்டத்துக்கு அடிப்படையான திருத்தங்களைக் கொண்டு வருவதில் சட்டாயமாகக் கட்டுப்படுத்தியுள்ளதாகவே எமக்குத் தெரிகிறது. இச்சபையினல் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட அநேக சட்டங்கள் அரசியல்சட்டத்துக்கு மாருனவையென்று ஒதுக்கிவைத்துவிட்டது.

(தொடரும்)

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

வளர்ப்பதற்குகந்த நோய் மருந்துகள்கொடுக்கப்பட்ட ஐந்து மாதவெள்ளை லெகோன், ஆர். ஐ. ஆர்., ஒஸ்டலோப் சேவல்கள் விற்பனைக்குண்டு. 21, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1970

**வைத்தியம்**

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய யாதிகள் குணமடைந்து படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர் வைத்தியர் பரிபூரணனந்த கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**வாடகைக்கு**

கச்சேரிக்கும் பாடசாலைகளுக்கும் அண்மையில் சுண்டிக்குளியில் ஹால், 2 படுக்கையறை, குசினி, கராஜுடன் கூடிய வீட்டின் பங்கு வாடகைக்கு உண்டு. புறம்பான வாசல். 22, கச்சேரி நல்லூர் வீதி என்ற விலாசத்தில் விசாரிக்கவும். 1967

**கல்வி**

ஜி. சி. ஈ. சாதாரணம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் மேல்தரம். ஆங்கிலம், சிங்களம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து தமிழில் ஆங்கிலத்தில். எல்லா வகுப்புகளிலும் இடமுண்டு. காலை மாலை. யாழ் கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட்டு, பெண்கள் கிளை 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1976

**காணவில்லை**

எமது ஸ்தாபனத்துக்குரிய பணம்பெறும் பற்றுச்சீட்டுப் புத்தகம் (2401-ம் இல. தொடக்கம் 2476-ம் இல. வரை பாவிக்கப்பட்டது,2,500வரைபாவிக்கப்படாததுதவறிவிட்டது)எமது வாடிக்கையாளரிடம் எவராவது தவருன முறையில் பணம் பெற முற்பட்டால் நாம் பொறுப்பாளிகளல்ல என்பதை எமது வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கின்ருேம். ஏ. எஸ். நடராசா, பலசரக்கு மாளிகை, 23, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1977

**வருடாந்த விழா**

சுழிபுரம், வெள்ளி இலங்கை முற்போக்கு மாதர்இயக்க வடபிரதேசக் கிளையின் வருடாந்த விழா யாழ். நகரமண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

திருமதி தேஜா குணவர்த்தன விழாவை ஆரம்பித்து வைப்பார். பிரதம விருந்தாளராக அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா கலந்துகொள்வார்.

---

புத்திசாலிகளான தாய்மார்கள்

"ராதா"

## கிறைப் ரொனிக்

**( Radha's Gripe Tonic )**

எப்பொழுதும் வீட்டில் வைத்திருக்கிருர்கள்.

தங்கள் குழந்தைச் செல்வங்களுக்குத் திடீரென உண்டாக்கித் தொல்லை கொடுக்கும்

★ வயிற்று வலி ★ சமியாக் குணம்

★ வயிற்ருேட்டம் ★ வயிற்றில் வாய்வு

மற்றும்

சகலவிதமான வயிற்றுக் கோளாறுகளுக்கும்

## ராதா கிறைப் ரொனிக்

உடனடியாக நிவாரணம் கொடுக்கும் என்று அவர்களுக்குத் தெரியும்.

நீங்களும் இன்றே ஒரு

**ராதா கிறைப் ரொனிக்**

வாங்கி வீட்டில் வைத்திருங்கள்.

● நம்பிக்கையானது ● பாதுகாப்பானது

● இறக்குமதியாகும் ரகங்களைவிட சிறந்தது.

இது ஒரு

"Radha Perfumery & Radha Products"

தயாரிப்பு

இலங்கையில் ஏகவிநியோகஸ்தர்கள்:

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம் போன்: 541, 7068

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## பஸ்நிலையத்தில் காடைத்தனம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் தற்போது காடைத்தனம் மலிந்துவிட்டதாக அறியப்படுகிறது.

மாலை நேரங்களில் இவ்வித காடைத்தனத்தில் ஈடுபடும் சிலர் போக்குவரத்துச் செய்யும் பெண்களிடம் சேட்டை செய்வதாகவும் இதனால் பெண்கள் பெரிதும் இன்னல்படுவதாகவும் தெரிகிறது.

இவர்களுக்கு அஞ்சி சிலர் டாக்ஸிகளில் ஏறிச்சென்றுவிடவேண்டி நேரிடுவதாகவும் இதனால் அவர்கள் மேலதிக செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிய வருகிறது.

இதுசம்பந்தமாக தற்போது பொலிசார் கண்காணிப்பு செய்துவருவதாக அறியப்படுகிறது.

## முத்திரை தட்டுப்பாடு

சுழிபுரம், வெள்ளி

இப்பகுதியிலுள்ள சகல தபாற் கந்தோர்களிலும் 5 சத முத்திரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புதிதாக வெளியான ஐந்துசத முத்திரைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-4 க்கு மட்டும்
பொலிஸ்காரன் மகள்
தினசரி 4-15க்கு மட்டும்
பிறிமிடிவ் லண்டன்
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜா தேவி
நடித்த
கல்யாண பரிசு

REGAL--JAFFNA
NOW SHOWING
Gregory Peck, Anthony Quinn
in
Guns of Navarone
(Cinemascope - Color)

## வாசிகசாலை வருடாந்த விழா

யாழ்ப்பாணம், சனி

அரியாலை அருணோதயா வாசிகசாலையின் ஆறாவது வருடாந்தவிழாவும் நாவலர் நினைவுதின விழாவும் சமீபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக விநோதஉடை ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலம் மேற்படி வாசிகசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நிலைய அரங்கை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் பலர் பலவிதமான வேடங்கள் அணிந்து வந்தார்கள்.

இதையடுத்து நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் விநோத உடையில் முதலாவதாக காலிழந்த நொண்டியாக வந்த நா. மகாதேவன் முதலாவது பரிசையும், கர்ப்பிணியாக வந்த செ. நவரத்தினராசா இரண்டாவது பரிசையும், சீவல் தொழிலாளியாக வேஷமிட்ட க. கனகரத்தினம் மூன்றாவது பரிசையும் பெற்றனர். மற்றும் க. தியாகராசாவின் காவடிக் கோஷ்டிக்கும் ஆறுதல்பரிசு வழங்கப்பட்டது.

இதையடுத்து வி. கதிரவேலு, சு. பரநிருபசிங்கம் ஆகியோர் நாவலர் பெருமானின் தொண்டுகளைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். விழா முடிவில் ''நல்லை நாவலன்'' என்னும் நாவலர் வாழ்க்கைபற்றிய நாடகம் மேற்படி நிலைய இளைஞர்களால் அரங்கேற்றப்பட்டது.

## இந்துசமயவிருத்தி சங்கவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வயாவிழான் — பலாலி தெற்கு இந்துசமயவிருத்திச் சங்கத்தின் எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் டாக்டர் இ. கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் டாக்டர் இ. கனகலிங்கம், தனாதிகாரி திரு. க. சிவபாதம், காரியதரிசி திரு. க. சுப்பிரமணியம்.

## டெஸ்ட் கிரிக்கெட்

கிறைஸ்ட்சேர்ச், பெப். 25

இங்கிலாந்துக்கும் நியூஸிலந்துக்குமிடையே இன்று ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இன்றைய ஆட்ட முடிவில் இங்கிலாந்து 7 விக்கெட் நஷ்டத்திற்கு 242 ரன்கள் எடுத்தது.

## லோகசபை ஒத்திவைப்பு

புதுடில்லி, பிப். 25

நேற்று நடைபெற்ற டில்லி லோகசபைக் கூட்டம், 'காபினட்' மந்திரிகள் எவரும் வராததால் ஒத்திவைக்கப்பட்டது.

## நடப்பு வருட உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

தேசிய அரசாங்க சுகாதாரசேவை தொழிலாளர் சங்க பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- திரு. அ. ஞானப்பிரகாசம், உபதலைவர் திரு. இ. வைரமுத்து, காரியதரிசி- திரு எம் ஐயன்னா, உபகாரியதரிசி- திரு. அ. துரைராசா, தனாதிகாரி- திரு எஸ் பொன்னுத்துரை, நிர்வாக சபை உறுப்பினர்கள்- திருவாளர்கள் க. கணபதிப்பிள்ளை எம். கனகரத்தினம், இ. செல்வத்துரை, பொ. பூவிலிங்கம், ரி. செபஸ்ரியான், திருமதி இராசரத்தினம், திருமதி தெய்வநாயகி, திருமதி அருளம்மா.

இ. போ. ச.

## பாதுகாப்பு நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

இ. போ. ச. தனக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொருநாளும் வேலை முடிந்தபின் காரியாலயங்களெல்லாம் பாதுகாப்பாகப் பூட்டப்பட்டுள்ளதா என்பதிலும் திறப்புக்களெல்லாம் பாதுகாப்பான இடங்களில் பொதுவாக அ காமையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதிலும் மிக்க கவனம் செலுத்தப்பட வேண்டும் என இ. போ. ச தலைவர்திரு. ஆர். ரி. டி' சில்வா பிரதேச மனேஜர்களுக்கும் டிப்போ சுப்ரின்டன்மார்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்பியுள்ள நிருபத்தில் அறிவித்தல் செய்துள்ளார்.

## புதியநிர்வாகிகள்

உடுப்பிட்டி, வெள்ளி

தையிட்டி பராசக்தி சனசமுகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு மு. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி. கணபதிப்பிள்ளை, உபதலைவர் வ. வல்லிபுரம், இணைச்செயலாளர்கள் செல்வன்கள் செ. பி. இளமுருகனார், வ. சிங்கராசா, பொருளாளர் திரு. வ. வன்னியசிங்கம், கணக்குப் பரிசோதகர் திரு. எஸ். இரத்தினசிங்கம். நிலையப் பொறுப்பாளர் திரு. செ. செல்வராசா. திருவாளர்கள் சி. கணபதிப்பிள்ளை. மு. கந்தப்பிள்ளை, வ. செல்வராசா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் வர்த்தகர்களுக்கு

# கூ. மொ. வி. யுடன் நேரடியாக கொள்வனவு செய்ய வாய்ப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள மொத்த வியாபாரிகள் கொழும்பிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதுபோல் யாழ்ப்பாணத்தின் சுற்றுப்புறங்களிலுள்ள இடங்களிலுள்ள வர்த்தகர்களும் கொழும்பிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் இப்பொருள்களைக் கொள்வனவுசெய்ய வாய்ப்பளிக்கப்படவிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள இரு வர்த்தகர்களுக்கு இவ்வித வாய்ப்பு அளிக்கப்படுமென்றும் இவர்கள் தத்தமது பகுதிக் காரியாதிகாரியுடன் தொடர்புகொண்டு விண்ணப்பித்து இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் அறியப்படுகிறது. இவ்விதம் கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திலிருந்து கொள்வனவுசெய்ய விரும்புபவர்கள். அடுத்தமாதம் 10-ம் திகதிக்கு முன் தத்தமது காரியாதிகாரிக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களுக்கு தேவையான பொருள்கள் கிடைக்க வகைசெய்யுமுகமாகவே அரசாங்கத்தினால் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில், கொழும்பு கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திலிருந்து நேரடியாக சில அத்தியாவசிய பொருள்கள் கொள்வனவுசெய்யும் 24 மொத்த வியாபாரிகள் உள்ளனர்.

## சிவராத்திரிவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வசாவிழான் — பலாலி தெற்கு இந்துசமயவிருத்திச்சங்கத்தினர் மகாசிவராத்திரி விழாவை சிறப்பாகக் கொண்டாடினர். விழாவிற்கு டாக்டர் இ. கனகலிங்கம் தலைமைதாங்கினார்.

கூட்டுப்பிரார்த்தனை, பேச்சுப்போட்டிகள், அறிவுரைகள் விழாவில் இடம்பெற்றன.

### தொல்புரத்தில்

தொல்புரம் மத்தி ஆதி முத்துமாரி அம்மன் கோவிலில் மகாசிவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நான்கு ஜாமப் பூசைகளுடன் தோத்திரப்பாடல்களும் அறிவுரைகளும் இடம்பெற்றன.

### ஓமந்தையில்

தொன்மைவாய்ந்ததும் சரித்திரமுக்கியத்துவம் பெற்றதுமான ஓமந்தை விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இப்பகுதிச் சைவ இளைஞர்கள் முன்னின்று நடாத்திய இவ்விழாவில் ஓமந்தை அரசினர் மகாவித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் பங்குகொண்டிருந்தனர்.

## சென்னைக்கருகே எண்ணெய் வயல்

சென்னை, பெப். 25

சென்னைக்குத்தெற்கே கடலோரப்பகுதியில், ரஷ்ய நிபுணர்கள் எண்ணெய் உற்பத்திப்பகுதியைக் கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## மேலதிக நகரசுத்தி தொழிலாளர்

மன்னார், வெள்ளி

மன்னார் பட்டினசபை எல்லைக்குள் உட்பட்ட வீதிகள் போதியளவு நகரசுத்தித் தொழிலாளர்கள் இல்லாமையால் சுத்தம்செய்யப்படாமல் இருப்பதையிட்டு ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன மன்னார்க் கிளையின் செயலாளர் திரு. வ. நட்சேத்திரம் பட்டின சபைத் தலைவர் ஜனாப் எஸ். எம். ஏ றகீமுக்கு முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மேலதிக நகரசுத்தித் தொழிலாளர்களை நியமிப்பதெனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 'ஆத்மீக முன்னேற்றம் அவசியம்'

இரத்தினபுரி, வெள்ளி

'விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றிலெல்லாம் மனிதன் எவ்வளவுதூரம் முன்னேறினாலும் ஆத்மீகத்துறையில் மனிதன் அக்கறை கொள்ளாவிட்டால் உலகம் வெறுமையாகவே காட்சியளிக்கும் இவ்வாறு இரத்தினபுரி உதவி வித்தியாதிபதி செல்வி எவலீன் பெர்னாண்டோ புலுகபிட்டியாவிலுள்ள ஸ்ரீசுமண வித்தியாலய பிரிவெனாவில்புதிய கட்டடத்துக்கான அத்திவாரக்கல் நாட்டுவிழாவில் பேசுகையில் கூறினார்.

வித்யோதயா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வண. டாக்டர் ஹென்மிட்ட கெதர ஞானவாசதேரோ இவ் வைபவத்துக்குத் தலைமை தாங்கினார். 'தெய்வீக வாழ்க்கைதான் உண்மையான முன்னேற்றத்தைத் தேடித்தரும்' என்றும் உதவிவித்தியாதிபதி எடுத்துக் கூறினார்.

## வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கவழி

மாத்தறை, வெள்ளி

நெசவுத்தொழிலை அபிவிருத்திசெய்வதன் மூலமே கிராமப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கலாமென வண. வெலதோட்ட பன்னதாசிதேரோ உள்நாட்டு அமைச்சர் தஹநாயக்காவுக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த மகஜரில் உள்நாட்டு அமைச்சர் ஒவ்வொரு தொகுதியிலும் நெசவுநிலையங்களை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பது பற்றி அவருக்குத் தேரோ நன்றிதெரிவித்துள்ளார்.

## பாடசாலைக்கு செல்லாது தடுத்ததால் தற்கொலை

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பு ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த திரிபுரசுந்தரி என்ற 16 வயது யுவதி பாடசாலைக்குச் செல்லாது தம்மைப் பெற்றோர் தடுத்த காரணத்தினால் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

தேவை
எமது போசனசாலையில் சமையல் செய்வதற்கு ஒருவரும், சப்ளை செய்வதற்கு இருவரும் தேவை. அனுபவம்வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. பாலசிங்கம் போசனசாலை 37, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
1978

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மோடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
இதுவரை ஹாஸ்ய பாத்திரங்களில் நடித்துவந்த நாகேஷ் இப்படத்தில் கதாநாயகனாகத் தோன்றி மிகவும் அற்புதமாக நடித்திருக்கிறார்.
நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன்
எஸ். ராமராவ், காஞ்சனா
நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
சர்வர் சுந்தரம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org